கூட்ட எண் : 06/2025

ஆரணி நகராட்சி,

நாள்:21.03.2025

<u>சாதாரணக்கூட்டம் அறிவிப்பு</u>

28.03.2025 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரணி நகராட்சி அலுவலகம் பேரறிஞர் அண்ணா மன்றத்தில் நகரமன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள சாதாரணக் கூட்டத்தில் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகரமன்ற தலைவர்,

ஆரணி நகராட்சி.

<u>திருக்குறள்</u>

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்

புன்கணீர் பூசல் தரும்.

(அதிகாரம் 8-71)

பொருள்கள்

1. நகராட்சி ஆணையாளர் அவர்களின் பிப்ரவரி 2025 மாதக் குறிப்பு மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

   **அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

2. நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி 2025 மாதக் குறிப்பு மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

   **அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

3. ஆரணி நகராட்சியின் வார்டு எண்.15-இல் கதவு எண்.67/1, கார்த்திகேயன் ரோட்டில் அமைந்துள்ள கே.பி.கே சம்பத் ஜானகி திருமண மண்டபத்தின் சொத்து வரி அதிகமாக உள்ளதென தெரிவித்து மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் திரு.பிரேம்குமார் என்பவர் தொடர்ந்த வழக்கில் (எண்.W.P.39765/2024) நகராட்சி சார்பாக திரு.எஸ்.ஜெ.முகமது சாதிக், அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியதற்கு உண்டான வழக்கறிஞர் கட்டணமாக ரூ.15000/-(ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) வழங்க கோரியுள்ளார். மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

   **அலுவலக குறிப்பு:** இச்செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.(கோப்பு எண்.451/2020/அ1

4. இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவின் செயல்படுத்தப்படும் தூய்மை இந்தியா திட்டம் SBM 2.O, மூலம் குப்பை இல்லா நகரம் தொடர்பான தரசான்று விளம்பரம் வெளியிட்டது தொகை ரூ.9450/- (மாலை முரசு) 2. மனிதக்கழிவுகளை மனிதர்களே கைகளால் அகற்றும் பணியினை மேற்கொள்ளும் நபர்கள் கணக்கெடுப்பு செய்யப்பட்டது தொகை ரூ.6,300/- (இந்து தமிழ் HASHI ADS) 3. நகராட்சிக்குட்பட்ட அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிப்பறைகள் மற்றும் பள்ளி வளாகத்தை சுத்தம் செய்ய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டது தொகை ரூ. 6,300/- (இந்து தமிழ் HASHI ADS) 4. மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் பணி கணக்கெடுப்பு செய்யப்பட்டதில் எவரும் கண்டறியப்படவில்லை என வெளியிடப்பட்டது தொகை ரூ.3116/- (தினமணி – Express Publications) ஆகிய 4 விளம்பரங்களுக்கு விளம்பர கட்டணம் தொகை ரூ.25166/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** 1. மன்றம் அனுமதிக்கலாம். 2. இச்செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம். (கோப்பு எண். 008/2025/எச்1)

5. இந்நகராட்சி பொது பிரிவில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து பணியிடை மரணமடைந்த திரு ரியாஸ்கான் என்பவர் பணியாளர் கூட்டுறவு சிக்கன கடன் சங்கத்தில் கடன் பெற்றது தொடர்பாக திரு.M. தமிழ்செல்வன் என்பவர் தொடர்ந்த வழக்கில் (W.P. NO.19614 of 2023) ஆஜரானதற்கு திரு S. பிரபாகரன் அரசு வழக்கறிஞர், வழக்கு கட்டணம் வழங்ககோரியுள்ளார். எனவே மேற்கண்ட வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணம் ரூ.15000/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.(கோப்பு எண் 3459/2014/சி1.)

6. ஆரணி நகராட்சிக்கு ஆற்காடு முப்பது வெட்டி தலைமை நீரேற்று நிலையம், கமண்டல நாகநதி நீரேற்று நிலையங்களில் இருந்து மேல் நீர்தேக்கத் தொட்டியில் சேகரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் நகரில் உள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இப்பணிகளுக்கு பொறியியல் பிரிவில் போதுமான பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளதால், மாவட்ட ஆட்சித் தலைவர் திருவண்ணாமலை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண் F3/1977974/2024 நாள் 20.05.2024ன்படி, SKILLED LABOUR ஒருநாள் கூலி ரூ.414/- வீதம் 12 பணியாளர்கள் மற்றும் 1 நபர்க்கு 628/-வீதம் தனியார் ஸ்ரீசாய்பாபா ஆடவர் குழுவின் மூலம் ஆட்களை பெற்று பணிகளை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி ஸ்ரீசாய்பாபா ஆடவர் குழுவிற்கு டிசம்பர் மாத ஊதியம் ரூ. 197680/-(168000) வழங்கியதை மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 766/2023/இ1)

7. ஆரணி நகராட்சிக்கு ஆற்காடு முப்பது வெட்டி தலைமை நீரேற்று நிலையம், கமண்டல நாகநதி நீரேற்று நிலையங்களில் இருந்து மேல் நீர்தேக்கத் தொட்டியில் சேகரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் நகரில் உள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இப்பணிகளுக்கு பொறியியல் பிரிவில் போதுமான பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளதால், மாவட்ட ஆட்சித் தலைவர் திருவண்ணாமலை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண் F3/1977974/2024 நாள் 20.05.2024ன்படி, SKILLED LABOUR ஒருநாள் கூலி ரூ.414/- வீதம் 12 பணியாளர்கள் மற்றும் 1 நபர்க்கு 628/-வீதம் தனியார் ஸ்ரீசாய்பாபா ஆடவர் குழுவின் மூலம் பெற்று மேற்படி பணிகளை மேற்கொள்ள ஜனவரி 2025 மாதம் முதல் ஏப்ரல் 2025 வரை நபர் 1க்கு 414/-வீதம் 12 நபர்களுக்கும், 1 நபர்க்கு 628/- வீதம் 30 நாட்கள் = 167880/-(168000) 4 மாதங்களுக்கு ஆகும் செலவினம் ரூ. 6,71,520/- (672000)க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம், 2. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (கோப்பு எண் 766/2023/இ1)

8. ஆரணி நகராட்சிக்குட்பட்ட ஆற்காடு தரைபாலம் பகுதியில் முப்பது வெட்டி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து வரும் குடிநீர் பிரதான குழாய் கமண்டல நாகநதியில் உடைப்பு சரி செய்யும் பணிகள் மதிப்பீடு ரூ.1.90 இலட்சத்தில், குடிநீர் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 2023 பிரிவு 57Aன் கீழ் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. என்ற விவரத்தை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :- 1. மன்றம் பதிவு செய்யலாம். 2. மேலும், அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 2023 பிரிவு 57Aன் கீழ் பணிகள் குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 1558/2024/இ1)

9. ஆரணி நகராட்சிக்குட்பட்ட ஆரணி தச்சூர் தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்தில், UG Cable 25Sqmm 180mtr , 3" (90mm) PVC Pipe 180mtr புதியதாக மாற்றி அமைத்தல் மற்றும் 5HP Motor"s 3No"s Service செய்யவும் மற்றும் JCB பயன்படுத்தும் பணிகள் குடிநீர் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 2023 பிரிவு 57Aன் கீழ் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. என்ற விவரத்தை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :- 1. மன்றம் பதிவு செய்யலாம். 2. மேலும், அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 2023 பிரிவு 57Aன் கீழ் பணிகள் குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (கோப்பு எண் 1558/2024/இ1)

10. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் சுயசான்றளிப்பு வரையறைக்குட்படாத குடியிருப்பு (ம) குடியிருப்பு அல்லாத கட்டுமானங்களுக்கு ஒற்றைச்சாளர இணைய முகப்பில் (Single Window Portal) கட்டட அனுமதி வழங்குவதற்கு செலுத்த வேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களை நிர்ணயம் செய்து வரப்பெற்ற அரசாணை (ப) எண். 72, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி. 1) துறை, நாள். 05.02.2025, மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 31917/2019/டிபி2 நாள். 13.02.2025 மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும்.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் பதிவு செய்யலாம்.

2.

| நகராட்சிகள் - குடியிருப்பு கட்டுமானம் - கட்டண விவரம் | | | | |
|---|---|---|---|---|
| **சுயசான்றளிப்பு வரையறைக்குட்படாத கட்டடங்கள் (3500 சதுர அடிக்கு மேல்)** | | | ஒருங்கிணைந்த கட்டணம் | |
| வ. எண் | நகராட்சியின் நிலை | எண்ணிக்கை | ரூ / சதுர மீட்டர் | ரூ / சதுர அடி |
| 1 | சிறப்பு நிலை நகராட்சிகள் | 13 | 800 | 74 |
| 2 | தேர்வு நிலை நகராட்சிகள் | 28 | 800 | 74 |
| 3 | நிலை - I நகராட்சிகள் | 31 | 750 | 70 |
| 4 | நிலை - II நகராட்சிகள் | 62 | 750 | 70 |
| | கூடுதல் | 134 | | |

அரசாணையில் தெரிவிக்கப்பட்ட மேற்படி கட்டண வழிகாட்டுதலின் படி வ. எண். 03 உள்ள ரூ. 750.00/- சதுர மீட்டர் / ரூ. 70.00 / சதுர அடி என்ற அடிப்படையில் ஆரணி நகராட்சியில் 3500 சதுர அடிக்கு மேல் கட்டப்படும் குடியிருப்பு கட்டிடங்களுக்கு கட்டணங்களை வசூல் செய்துக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3. இதர குடியிருப்பு அல்லாத கட்டுமானங்களுக்கு (Other than self - certification Buildings) 125% 1.25 மடங்கிற்கு குறையாமல் இருக்குமாறு பட்டியலில் கண்டுள்ள கட்டணத்தை நிர்ணயம் செய்ய மன்றம் முடிவு செய்யலாம்.

| நகராட்சிகள் - இதர குடியிருப்பு அல்லாத கட்டுமானங்கள் - கட்டண விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | நகராட்சியின் நிலை | ஒருங்கிணைந்த கட்டணம் (குடியிருப்பு) | | ஒருங்கிணைந்த கட்டணம் (இதர குடியிருப்புகள் அல்லாதவை/ (1.25 மடங்கு) | |
| | | ரூ / சதுர மீட்டர் | ரூ / சதுர அடி | ரூ / சதுர மீட்டர் | ரூ / சதுர அடி |
| 1 | சிறப்பு நிலை நகராட்சிகள் | 800 | 74 | 1000 | 93 |
| 2 | தேர்வு நிலை நகராட்சிகள் | 800 | 74 | 1000 | 93 |
| 3 | நிலை - I நகராட்சிகள் | 750 | 70 | 938 | 87 |
| 4 | நிலை - II நகராட்சிகள் | 750 | 70 | 938 | 87 |

அரசாணையில் தெரிவிக்கப்பட்ட மேற்படி குடியிருப்பு கட்டண வழிகாட்டுதலின்படி 1.25 மடங்கு என்ற விகிதத்தில் வ.எண். 03 உள்ள ரூ. 938/ சதுர மீட்டர் / ரூ. 87.00 / சதுர அடி என்ற அடிப்படையில் ஆரணி நகராட்சியில் இதர குடியிருப்பு அல்லாத கட்டுமானங்களுக்கு கட்டணங்களை வசூல் செய்துக் கொள்ள மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது. (கோப்பு எண். 45/2022/எப்1)

11. ஆரணி நகராட்சி பகுதியில் டெங்கு நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு கிருமிநாசினி தெளித்தல் மற்றும் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள 01.12.2024 முதல் 28.02.2025 வரையிலான காலத்திற்கு ஆரணி மல்லிகை சுய உதவிக் குழுவிற்கு பணி நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டது தற்போது பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்படி குழுவிற்கே மீண்டும் 01.03.2025 முதல் 31.05.2025 வரை பணி நீட்டிப்பு செய்து வழங்கவும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1. மன்றம் அனுமதிக்கலாம். 2. மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயித்த தினசரி கூலி அடிப்படையில் கூலி தொகை வழங்கவும். மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 3. அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

(கோப்பு எண். 538/2020/எச்1)

12. ஆரணி நகராட்சி வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதி 2024-2025ஆம் நிதி ஆண்டில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 24.01.2025 அன்று கோரப்பட்ட மின்னனு ஒப்பந்தப்புள்ளிகளில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப் பட்டியலினை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகள் விவரம் | மதிப்பீடு ரூ. லட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் விவரம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|---|
| 1 | குடிநீர் நிதி<br>ஆரணி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் சிறு மின்விசை பம்புகளுக்கு தேவையான புதிய 25 எண்ணிக்கை 1HP மோட்டார், Panel Board Adaptor விநியோகம் செய்தல் | 9.00 | த.சத்தியநாராயணன்<br><br>வி.சுரேஷ் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு<br><br>மதிப்பீட்டை விட 0.07% அதிகம் |
| 2 | குடிநீர் நிதி<br>ஆரணி நகராட்சி வார்டு எண் 01 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய்கள் பராமரித்தல் மற்றும் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின்மோட்டார்கள், உதிரி பாகங்கள் பழுது மேற்கொள்ளுதல் பணி | 9.50 | த.சத்தியநாராயணன்<br><br>வி.சுரேஷ் | மதிப்பீட்டை விட 0.03% குறைவு<br><br>மதிப்பீட்டை விட 0.07% அதிகம் |
| 3 | வருவாய் நிதி<br>ஆரணி நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி MCC மற்றும் புதுகாமூர் ரோடு நவீன எரிவாயு தகன மேடை MCC ஆகிய இரண்டு இடங்களில் உள்ள Shredding Machine மின் மோட்டார்கள் பெல்ட் மாற்றி அமைத்து, மின்மோட்டார்கள் பழுது நீக்கம் செய்து காயில் கட்டுதல் பணிகள் செய்தல் | 0.60 | M/s எம்.ஆர்.ஆர் சப்ளையர்ஸ், சென்னை<br><br>ராஜேஸ்வரி எஸ். நாதன் கெமிகல்ஸ் சென்னை | மதிப்பீட்டை விட 0.01% குறைவு<br><br>மதிப்பீட்டை விட 10.00% அதிகம் |

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி பணிகளுக்கு மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகரிக்கலாம்.

13. மாவட்ட திட்ட அலுவலர் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் திருவண்ணாமலை அவர்களின் கடித ந.க.எண் 926/அ1/2024 நாள் 22.01.2025 அவர்களின் கடிதத்தில், ஆரணி நகராட்சிக்குட்பட்ட குழந்தைகள் வளர்ச்சி மைய கட்டிடங்களில் கழிவறை இல்லாத மையங்களுக்கு 1. ஆசாத் தெரு, 2. கண்ணகி நகர், 3. கே.பி.கே நகர், 4. எம்.ஜி.ஆர் நகர், 5. நாடகசாலை பேட்டை தெரு, 6. பொன்னுசாமி தெரு, 7. ராஜாஜி தெரு, 8. சாமித் தெரு, 9. சார்பனார் பேட்டை, 10. அம்பேத்கார் நகர் (பிள்ளையார் கோயில் அருகில்) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் 2023-2024 ன் கீழ் புதிய கழிவறை கட்ட ஒன்றிற்கு ரூ. 36000/-வீதம் 10 எண்ணிக்கை மையங்களுக்கு ரூ.360000/- மதிப்பீட்டில் அமைக்க தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும் பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :- மன்றம் அனுமதிக்கலாம். (கோப்பு எண் 212302024/இ1)

14. ஆரணி நகராட்சிக்கு ஆற்காடு முப்பது வெட்டி தலைமை நீரேற்று நிலையம், கமண்டல நாகநதி நீரேற்று நிலையங்களில் இருந்து மேல் நீர்த்தேக்கத் தொட்டியில் சேகரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் நகரில் உள்ள தெரு விளக்குகள் பராமரிப்பு பணிகள், குடிநீர் விநியோகம், குடிநீர் பராமரிப்பு பணிகள் புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குதல் மற்றும் குடிநீர் விநியோக பிரதான குழாய்கள் பழுது பார்த்தல், குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் பணிபுரிதல், நகரில் உள்ள சிறுமின்விசை பம்புகள் பழுது பார்த்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மேற்குறிப்பிட்டுள்ள பணிகள் மேற்கொள்ள பொறியியல் பிரிவில் போதுமான பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளதால்,மாவட்ட ஆட்சி தலைவர் திருவண்ணாமலை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.F3/1977974/2024, நாள்:20.05.2024இன்படி, SKILLED LABOUR ஒரு நாள் கூலி ரூ.414/-வீதம் 14 பணியாளர்கள் தனியார் ஸ்ரீஆஞ்சநேயா ஆடவர் குழுவின் மூலம் ஆட்களை பெற்று பணிகள் மேற்கொள்ளவும், அப்பணியாளர்களுக்கு ஏப்ரல் 2025 மாதம் முதல் ஜூன் 2025 வரை நபர் 1க்கு 414/-வீதம் 14 நபர்களுக்கும்,30நாட்கள் = 1,73880/-(174000) 3மாதங்களுக்கு ஊதியம் வழங்க ஆகும் செலவினம் ரூ.5,25,000/- க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: 1.மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். 2. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(கோப்பு எண்.1046/2023/இ1)

15. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடித ந.க.எண் 16491/2022/EA-2 நாள் 27.02.2025ந் தேதிய கடிதத்தில், 15-வது நிதிக்குழு மான்யம் 2022-2023 மற்றும் 2023-2024 ஆம் ஆண்டுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட Tied Grand & Untied Grand -ன் கீழ் செய்து முடிக்கப்பட்டுள்ள பணிகள் போக மீதமுள்ள நிதிக்கு கீழ் குறிப்பிட்டுள்ள பணிகள் மேற்கொள்ள உரிய அனுமதி வழங்கி வரப்பெற்றுள்ள கடிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அதன் விவரம் பின்வருமாறு :-

Tied Grant - 2022-23

| வ.எண் | பணிகளின் விவரம் | திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சம்) |
|---|---|---|
| 1 | Repair and Renovation Works to Mini power pump and Fleshing of Bore well in ward No.1 to 33 | 12.28 |

Untied Grant - 2022-23

| வ.எண் | பணிகளின் விவரம் | திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சம்) |
|---|---|---|
| 1 | Construction of Storm Water Drain in Pillaiyar Kovil Street Ward No.07 | 11.18 |

Tied Grant - 2023-24

| வ.எண் | பணிகளின் விவரம் | திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சம்) |
|---|---|---|
| 1 | Water Supply<br>Construction of 3 Additional New Bore wells and Motors in Kamandala naganathi Pumping Station | 12.00 |
| 2 | Construction of 2 Additional New Bore wells and Motors in Thachur Pumping Station | 8.00 |
| 3 | Supply and Delivery of 90HP Centrifugal Motor, 5HP Sub Open well Motor, 25sq mm UG Cable 10HP Oil Starter and replacement of faulty cables in Arcot Muppedhuvetti Pumping Station | 53.80 |
| 4 | Providing Distribution Main and Supply and Delivery of 100mm dia valve 80mm dia valve in Uncovered areas. | 2.67 |
| | Sub Total | 76.47 |
| 1 | Solid Waste Management-<br>Out Sourcing Salary Purpose for SWM Activity | 64.27 |
| 2 | Supply Delivery and Erection of Incinerator Machine with smoke Control unit | 10.80 |
| 3 | Supply Delivery and Erection of Electronic Digital Weighing Machines. | 9.40 |
| 4 | Supply Delivery and Erection of Bailing Machine | 12.00 |
| | Sub Total | 96.47 |

Untied Grant - 2023-24

| வ.எண் | பணிகளின் விவரம் | திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சம்) |
|---|---|---|
| 1 | Construction of Storm Water Drain in Pillaiyar Kovil Street Ward No.07 | 18.93 |

அலுவலக குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண் 387/2024/இ1)

16. இந்நகராட்சியில் உதவி செயற் பொறியாளராக பணி புரிந்து வந்து வயது முதிர்வு காரணமாக 31.01.2025 அன்று பணி ஓய்வு பெற்ற திரு.பழனி. சி.என்பவருக்கு

| | | |
|---|---|---|
| 1. | சிறப்பு சேமநலநிதி அசல் | ரூ.2960.00 |
| 2. | சிறப்பு சேமநலநிதி அசலுக்கான வட்டி | ரூ.19968.00 |
| 3. | நிர்வாக பங்குத்தொகை | ரூ.10000.00 |
| | மொத்தம் | ரூ.32928.00 |

வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்புமன்றம் அனுமதி அளிக்கலாம்.**

(கோப்பு எண்.0267/2025/B2)

17. இந்நகராட்சியில் தூய்மை பணியாளராக பணி புரிந்து வந்து வயது முதிர்வு காரணமாக 30.06.2024 அன்று பணி ஓய்வு பெற்ற திரு.க.முருகேசன் என்பவருக்கு

| | | |
|---|---|---|
| 1. | சிறப்பு சேமநலநிதி அசல் | ரூ.2960.00 |
| 2. | சிறப்பு சேமநலநிதி அசலுக்கான வட்டி | ரூ.11457.00 |
| 3. | நிர்வாக பங்குத்தொகை | ரூ.10000.00 |
| | மொத்தம் | ரூ.24417.00 |

வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்புமன்றம் அனுமதி அளிக்கலாம்.**

(கோப்பு எண்.0318/2025/B2)

18. இந்நகராட்சியில் தூய்மை பணியாளராக பணி புரிந்து வந்து வயது முதிர்வு காரணமாக 28.02.2025 அன்று பணி ஓய்வு பெற்ற திரு.எஸ்.முத்துகிருஷ்ணன் என்பவருக்கு கீழ் கண்டுள்ளவாறு

| | | |
|---|---|---|
| 1. | சிறப்பு சேமநலநிதி அசல் | ரூ.2960.00 |
| 2. | சிறப்பு சேமநலநிதி அசலுக்கான வட்டி | ரூ.14197.00 |
| 3. | நிர்வாக பங்குத்தொகை | ரூ.10000.00 |
| | மொத்தம் | ரூ.27157.00 |

வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்புமன்றம் அனுமதி அளிக்கலாம்.**

(கோப்பு எண்.0318/2025/B2)

நகரமன்ற தலைவர்,
ஆரணி நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
ஆரணி.
நாள்:21.03.2025